

# பெற்றோர்களுக்காக கேட்க வேண்டிய துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# பெற்றோர்களுக்காக கேட்க வேண்டிய துஆக்கள்

1

رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ
وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ ﴿٤١﴾

ரப்பனஃபிர்லீ வலிவாலிதய்ய வலில்
முஃமினீன யவ்ம யகூமுல் ஹிஸாப்

"எங்கள் இறைவா! என்னையும், என் பெற்றோர்களையும், முஃமின்களையும் கேள்வி கணக்குக் கேட்கும் நாளில் மன்னிப்பாயாக !"

திருக்குர்ஆன் 14:41

# பெற்றோர்களுக்காக கேட்க வேண்டிய துஆக்கள்

2

رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِى صَغِيرًا

ரப்பிர் ஹம்ஹுமா கமா ரப்பயானீ ச(ص)கீ(غ)ரா

என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப் பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்கள் இருவருக்கும் கிருபை செய்வாயாக!

திருக்குர்ஆன் 17:24

# பெற்றோர்களுக்காக கேட்க வேண்டிய துஆக்கள்

3

رَبِّ اَوْزِعْنِىْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِىْٓ اَنْعَمْتَ
عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰىهُ
وَاَدْخِلْنِىْ بِرَحْمَتِكَ فِىْ عِبَادِكَ الصّٰلِحِيْنَ

ரப்பி அவ்ஸி(ز)ஃனீ அன் அஷ்குர நிஃமதகல்லதீ
அன்அம்த அலய்ய வஅலா வாலிதய்ய
வஅன் அஃமல ஸா(ص)லிஹன்
தர்ளா(ض)ஹு வஅத்ஹி(خ)ல்னீ பிரஹ்மதிக
பீ(ف) இபாதிகஸ் ஸா(ص) லிஹீன்.

என் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள் செய்வாயாக! இன்னும் உம் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!

திருக்குர்ஆன் 27:19

# பெற்றோர்களுக்காக கேட்க வேண்டிய துஆக்கள்

**4**

رَبِّ اَوْزِعْنِىْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِىْٓ
اَنْعَمْتَ عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ وَاَنْ اَعْمَلَ
صَالِحًا تَرْضٰىهُ وَاَصْلِحْ لِىْ فِىْ ذُرِّيَّتِىْ
اِنِّىْ تُبْتُ اِلَيْكَ وَاِنِّىْ مِنَ الْمُسْلِمِيْنَ

ரப்பி அவ்ஸி(ز) ஃனீ அன் அஷ்குர நிஃமதகல்லதீ அன் அம்த அலய்ய வ வஅலா வாலிதய்ய வ அன் அஃமல ஸா(ص)லிஹன் தர்ளா(ض)ஹு வ அஸ்(ص)லிஹ்லீ பீ(ف) து(ذ)ர்ரிய(த்)தீ இன்னீ துப்து இலைக்க வ இன்னீ மினல் முஸ்லிமீன்.

இறைவனே! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்த நிஃமதுக்காக, (அருள் கொடைகளுக்காக) நன்றி செலுத்தவும், உன்னுடைய திருப்தியை அடையக் கூடிய ஸாலிஹான நல்ல அமல்களைச் செய்யவும் எனக்கு அருள் பாலிப்பாயாக! என்னுடைய சந்ததியையும் ஸாலிஹானவர்களாக சீர்படுத்தி அருள்வாயாக! நிச்சயமாக நான் உன்பக்கமே திரும்புகிறேன்; அன்றியும், நான் முஸ்லிம்களில் நின்றுமுள்ளவனாக இருக்கின்றேன்"

**திருக்குர்ஆன் 46:15**

# பெற்றோர்களுக்காக கேட்க வேண்டிய துஆக்கள்

5

## நூஹ்(அலை) அவர்கள் கேட்ட துஆ

رَبِّ اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ

مُؤْمِنًا وَّلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ ؕ وَلَا تَزِدِ

الظّٰلِمِيْنَ اِلَّا تَبَارًا

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ வலி வாலிதய்ய வலிமன் தஹ(خ)ல
பை(த்)திய முஃமினவ் வலில் முஃமினீன வல் முஃமினாத்தி
வலா தஸி(ز)திழ் ழா(ظ)லிமீன இல்லா தபாரா

என் இறைவா! எனக்கும், என் பெற்றோருக்கும், என் வீட்டில் நம்பிக்கையாளர்களாகப் பிரவேசித்தவர்களுக்கும், முஃமினான ஆண்களுக்கும், முஃமினான பெண்களுக்கும், நீ மன்னிப்பு அளிப்பாயாக! மேலும், அநியாயக்காரர்களுக்கு அழிவையேயல்லாது (வேறு எதையும்) நீ அதிகரிக்காதே!

குறிப்பு: பெற்றோருக்காக மட்டும் துஆ செய்பவர்கள் 'ரப்பிக்(غ)பி(ف)ர்லீ வலி வாலிதய்ய' என்ற பகுதியை மட்டும் கேட்கலாம்.

திருக்குர்ஆன் 71:28